جمعية علماء سريلانكا
සමස්ථ ලංකා ජමියියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA
(Incorporated by Act of Parliament No.: 51 of 2000)
இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் சபை / ඉස්ලාමීය ආගමික වියතුන්ගේ සංගමය / COUNCIL OF ISLAMIC THEOLOGIANS

எமது இல.: 016/F/ACJU/2009

2009.04.29
1430.05.03

செயலாளர்,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா – கல்குடாக் கிளை,
த. பெ. இல.: 04, (கே.பீ. ஹாஜியார் வீதி,)
ஓட்டமாவடி - 01.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹ்.

## ஸஹீஹுல் புகாரி கிரந்தம் வாசித்தல்.

ஸஹீஹுல் புகாரி கிரந்தம் வாசித்தல் பற்றி மார்க்கத் தீர்ப்புக் கோரி 2007.08.21 திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதமும், மையவாடியில் பாதையமைத்தல் பற்றி தீர்ப்புக் கோரி 2008.06.04 தேதியிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்ட கடிதமும் இத்தால் தொடர்புகொள்ளப்படுகின்றன.

எல்லாப் புகழும் வல்ல அல்லாஹ்வுக்கே. சலாத்தும், ஸலாமும் அவனின் இறுதித் தூதர் முஹம்மத் (சல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மீதும், அவர்களின் கிளையார்கள், தோழர்கள் மீதும் உண்டாவதாக!

1. ஸஹீஹுல் புகாரி கிரந்தம் வாசித்தல்

அல்-ஜாமிஉஸ் ஸஹீஹ் எனும் இமாம் புகாரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் எழுதிய பிரபல்யமான கிரந்தம் ஸஹீஹுல் புகாரி என அழைக்கப்படுகின்றது. 1080 ஆசிரியர்களிடமிருந்து கற்ற ஹதீஸ்களை 16 ஆண்டுகள் ஈடுபாடு காட்டி அந்நூலை அவர்கள் தொகுத்துள்ளார்கள். 90,000 மாணவர்கள் அவர்களிடமிருந்து ஹதீஸ்களை கேட்டறிந்துள்ளனர். ஸஹீஹுல் புகாரி ஒவ்வொரு முஸ்லிமும் படித்துப் பயன்பெற வேண்டிய மிக முக்கியமான கிரந்தங்களில் ஒன்றாகும். அதில் இமாம் புகாரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் மனித வாழ்வுக்குத் தேவையான முக்கியமான விடயங்களை ஸஹீஹான ஹதீஸ்கள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்கள். ஹதீஸ், பிக்ஹ் ஆகிய இரண்டையுமே சேர்த்து கூறியுள்ளார்கள் என்று கூறினால் மிகையாகாது.

எனவே இக்கிரந்தத்தை விரிவுரைகளுடன் கற்பிப்பதற்காக மஸ்ஜித்களிலோ அல்லது பொருத்தமான வேறு இடங்களிலோ ஏற்பாடுகள் செய்து ஆலிம்களின் உதவியுடன் சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்ப தினமும் சில ஹதீஸ்களைப் படித்து அதன் பிரகாரம் செயலாற்றுவது மிகச் சிறப்பானதாக அமையும் எனக் கருதுகின்றோம்.

எந்த ஒரு நல்ல அமலையும் தொடர்ந்து செய்து வருவது சிறப்பானது. பின்வரும் நாயக வாக்கியம் இதனைத் தெளிவுபடுத்துகின்றது:



211, Orabi Pasha Street, Colombo-10, Sri Lanka.
Telephone: +(94)11 5 373148, Fax: +(94)11 2 435859, E-mail : jamiyyah@lankabellnet.com

நபி (சல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அமல்களில் எது அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானது என கேட்கப்பட்டபோது "அவைகளில் தொடர்ச்சியானது, குறைவாக இருந்தாலும் சரியே" என கூறினார்கள்.

(நூல்: சஹீஹுல் புகாரி, பாடம்: அமலில் நடுநிலை பேணலும், தொடர்ந்து செய்தலும்)

ஹதீஸ்களை வாசித்து விளங்கி அதன் பிரகாரம் அமல் செய்வது இபாதத்தாகும். ஆனால், அதை சில குறிப்பிட்ட நாட்களில் பரக்கத்திற்காக வாசிப்பது பிறகு அதை விட்டுவிடுவது அல்லது அதிலுள்ள நபிமொழிகளின் அர்த்தத்தையும் விளக்கத்தையும் படிக்காமல் புரியாமல் பாராயணம் செய்வது என்பன கண்ணியமான ஹதீஸ் விடயத்தில் நாம் கடைபிடிக்க வேண்டிய முறையான செயல்களல்ல.

அல்லாஹ்வே நன்கு அறிந்தவன்.

வஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு.

அஷ்-ஷைக் டப்ளியு. தீனுல் ஹஸன்
செயலாளர், ஃபத்வாக் குழு,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

அஷ்-ஷைக் எச். அப்துல் நாஸர்
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

அஷ்-ஷைக் எம்.ஐ.எம்.ரிஸ்வி (முஃப்தி)
தலைவர்,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

**Source:**

http://www.acju.net/Documents/Fatawa%20Categorized/fatwakkal/19.Poduwanavaigal/Poduwana%20f9.pdf